**நாள் 02.11.2023**

**OS No. 51/2020**

**வா.சா.1, திரு. திருமலை குமார்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் மூன்றாவது பிரதிவாதி எனது தகப்பனார். இந்த வழக்கின் ஒன்றாவது பிரதிவாதி எனது சித்தப்பா. இரண்டாவது பிரதிவாதி எனது பெரியப்பா. இந்த வழக்கின் தபசில் சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. இந்த சொத்துக்களை பொறுத்து எங்கள் குடும்பத்தில் முன்பு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது. பெரியப்பா மற்றும் சித்தப்பாவிற்கு வீடும் என் தகப்பனாருக்கு (மூன்றாம் பிரதிவாதி) காலி மனையும் என்று பிரிவினை செய்யப்பட்டது. எனது அப்பா 29.05.2005 அன்று நன்கொடை ஆணவம் எழுதிக் கொடுத்ததன் மூலம் எனக்கு சொத்து கிடைத்தது. நான் அதில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். அதில் பேரூராட்சியில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

2. வீட்டின் பின் வாசலில் மூன்று படிக்கட்டுகள் போடப்பட்டுள்ளது. வீட்டின் பின் பக்கத்தில் பொது முற்றம் உள்ளது. கிழக்கே பொது நடைபாதை உள்ளது. இதே இடம் தொடர்பாக ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் 2006 ஆம் ஆண்டு வழக்கு போட்டுள்ளார்கள்.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்கனவே சாட்சி அவரது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் கேள்விகள் கேட்கப்பட்டது. அவை ஏற்கனவே நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளதால் நீதிமன்றம் மேற்படி கேள்விகளை பதிவு செய்ய மறுத்தது.)**

**(1 வது, 2 வது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப் படுகிறது.)**

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

M SUNIL RAJA

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by M SUNIL RAJA
Location: Shencottah
Date: 2023.11.02 19:01:13 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai

(S.M., Typist)

**/True copy/**